# தகவல் பலகை!

**ஆ**ந்திர மாநிலத்தில் கர்னூல் மாவட்டத்தில் இருக்கிறது அஹோபிலம். ஹைதராபாத்திலிருந்து சுமார் 330 கி.மீ. தொலைவு. கடப்பாவிலிருந்து 112 கி.மீ. நந்தியாலிலிருந்து 65 கி.மீ.

எந்த ஊரிலிருந்து வந்தாலும், அல்லகட்டா என்ற ஊரைக் கடந்துதான் அஹோபிலத்துக்கு வந்து சேர வேண்டும். அஹோபிலத்துக்கு மிக நெருக்கமான பெரிய ஊர் அல்லகட்டா. அல்லகட்டாவிலிருந்து சுமார் 24 கி.மீ. தொலைவில் இருக்கும் அஹோபிலத்தை அடைய பேருந்துகள், வேன்கள் கிடைக்கும்.

தமிழ்நாட்டிலிருந்து அஹோபிலம் செல்ல விரும்புபவர்கள், சென்னையிலிருந்து கடப்பாவுக்கு ரயில் அல்லது பேருந்து மூலமாகச் சென்று, அங்கிருந்து அல்லகட்டா வழியாக அஹோபிலத்துக்குப் பேருந்துப் பயணம் மேற்கொள்ளலாம்.

அஹோபிலத்தில் தங்குவதற்கு திருப்பதி தேவஸ்தானத்தின் விடுதி உண்டு. இங்கு ஐம்பது ரூபாயிலிருந்து அறைகள் கிடைக்கும்.

அஹோபில மடத்திலும் வசதியான அறைகள் கிடைக்கும். இருநூறிலிருந்து முந்நூறு வரை வாடகை. (வெளியே போகும்போது மறக்காமல் ஜன்னல் கதவுகளைச் சாத்தித் தாழிட்டுப் போக வேண்டும்.) குரங்குகள் தொந்தரவு அதிகம்.

மடத்தின் தொலைபேசி எண்கள்: 08519 – 252045, 252025, 252098.

மடத்துக்கு முன்கூட்டியே தகவல் கொடுத்துவிட்டால், மலைகளில் வெவ்வேறு புள்ளிகளில் அமைந்திருக்கும் நவநரசிம்மர்கள் ஆலயங்களுக்கும் அழைத்துச் சென்று உடனிருந்து விளக்கம் சொல்லும் வழிகாட்டிகளை ஏற்பாடு செய்து தருகிறார்கள். (கட்டணம் ரூ. 250–லிருந்து 300 வரை)

வழிகாட்டி இல்லாமல் போனால், கரடுமுரடான மலைப் பாதைகளில் முட்டி வலிக்க ஏறி இறங்கி புறப்பட்ட ஆலயத்துக்கே மறுபடி வந்து சேரும் விபத்து நேரலாம். ஒரே மாதிரி இருக்கும் மலைப் பாதைகளில் வழி தவறிப் போகவும் வாய்ப்பு உண்டு. பெரிய அளவில் உணவு விடுதிகள் கிடையாது. மடத்தையொட்டி எளிமையான கேன்ட்டீன் ஒன்று இயங்குகிறது. இது தவிர அஹோபில மடத்தில் பகலிலும், இரவிலும் இலவசமாக உணவு வழங்கப்படுகிறது.